# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| அ.வ.எண். | 89/2020 | சாட்சி | வா.சா.1 |
|---|---|---|---|
| பெயர் | செல்வராஜ் | நாள் | 20.03.2024 |
| தகப்பனார் பெயர் | சவரிமுத்து | | |

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:-**

1) என் பிரமான பத்திரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு முன்பு நான் எங்கு வசித்து வந்தேன் என்றால், பொன்நகரில் வசித்து வந்தேன். பொன்நகரத்தில் நான் வசித்து வந்த வீட்டின் கதவு எண் என்வென்றால், க.எண்.51/222-B-5 ஆகும். மேற்படி முகவரியில்தான் நான் வசித்து வந்தேனா என்றால், மேற்படி முகவரி என் தந்தை சவரிமுத்துவின் வீடு ஆகும். என் பிரமான பத்திரிக்கையில் மேற்படி முகவரியைத்தான் காட்டியுள்ளேன் என்றால், சரிதான். தற்போது நான் வசித்து வரும் வீட்டு முகவரி என்னவென்றால், கதவு எண்.13-A, பொன் நகர் ஆகும்.

2) தற்போது நான் தாக்கல் செய்துள்ள பிரமான பத்திரிக்கையில் மேற்படி க. எண். 13-A வை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தற்போது என் பிரமான பத்திரிக்கையில் காட்டியுள்ள க.எண்.51/222-B-5 பொன் நகர் என்ற முகவரியில் எப்போதிலிருந்து குடியிருந்து வருகிறேன் என்றால் நான் பிறந்ததிலிருந்தே மேற்படி முகவரியில்தான் வசித்து வந்தேன். நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துனராக பணிபுரிந்து வந்தேன் என்றால், சரிதான். தற்போது ஓய்வுப்பெற்றுவிட்டேன்.

3) பொதுவாக என் பணி நேரம் எவ்வளவு என்றால், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதத்தில் இருக்கும். காலையில் பணிக்கு சென்றால், இரவு வரை பணி இருக்கும். மதியம் பணிக்கு சென்றால், மறுநாள் மதியம் வரை பணி இருக்கும். ஒரு நாள் எனக்கு பணியிருந்தால் மறுநாள் ஓய்வும், அதற்கு அடுத்த நாள் மீண்டும் பணியும் இருக்கும் என்றால், சரிதான்.

4) என் பணி காலத்தில் நான் சிறப்பாக பணிபுரிந்ததால், நான் ஓய்வு பெறும் சமயத்தில் அதற்காக எனக்கு சிறப்பாக பணியாற்றியதற்காக சான்றளிக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். என் பிரமான பத்திரிக்கையில் இருசாக்கவுண்டர் என்பவர் முதலில் தாவா சொத்தை ஆக்கிரமித்து அனுபவித்து வந்ததாக நான் சொல்லியுள்ள நிலையில், சுமார் எத்தனை ஆண்டுகளாக அவர் மேற்படி நிலத்தை அனுபவித்து வந்தார் என்றால், நான் சிறுவனாக இருக்கும் பொழுதிலிருந்தே மேற்படி நிலத்தை அவர் அனுபவிப்பதை பார்த்துள்ளேன். சுமார் 50 வருடங்களுக்கு மேல் இருக்கும்.

5) மேற்படி இருசாக்கவுண்டர் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால், இல்லை. தற்போது சுமார் 1 வருடத்திற்குள் இறந்துவிட்டார். மேற்படி இருசாக்கவுண்டர் இறக்கும் பொழுது அவருக்கு சுமார் 92 வயது இருக்கும். மேற்படி நிலத்தை இருசாக்கவுண்டர் ஆக்கிரமிப்பு செய்து, அனுபவித்து வந்ததாக நான் சொல்லும் சமயத்தில், அவருக்கு சுமார் 40 வயது இருக்குமா என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. மேற்படி இருசாக்கவுண்டரிடமிருந்து முதலில் சொத்தை யார் வாங்கியது என்றால், 2013ம் வருடத்தில் முகமது உஷேன் என்பவர் கிரயம் வாங்கினார்.

6) முகமது உஷேன் கிரயம் பெற்ற போது நிலத்தின் சர்வே எண் என்னவென்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. நான் யாரிடமிருந்து மேற்படி சொத்தை வாங்கினேன் என்றால், தேவராஜ் என்பவரிடமிருந்து சொத்தை வாங்கினேன். நான் வாங்கியபோது தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்றால், சர்வே எண் எனக்கு தெரியவில்லை. ஆனால், கதவு எண், வரிவிதிப்பு எண், மின் கட்டண இணைப்பு எண் மற்றும் குடிநீர் இணைப்பு எண் ஆகியவை என் கிரயப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

7) தற்போது நான் வசித்து வரும் சொத்து எந்த பிளாக்கில் அமைந்துள்ளது என்றால், பிளாக் எண் எனக்கு தெரியவில்லை. என் சொத்து அமைந்துள்ள நகர புல எண் எனக்கு தெரியுமா என்றால், தற்போது எனக்கு நினைவில்லை. நான் குடியிருந்து வரும் இடமானது, நகராட்சிக்கு குப்பை கிடங்காக பயன்படுத்தப்பட்டு வந்தது என்றால்,

சரியல்ல. தற்போது நான் வசித்து வரும் தாவா நிலமானது எந்த வகைப்பாட்டை சார்ந்தது என்றால், நத்தம் புறம்போக்கு நிலம் ஆகும். நான் சொல்வது தவறானது என்றாலும், தாவா நிலமானது ஓடை புறம்போக்கு நிலம் என்றாலும், அது பொதுப்பணித்துறைக்கு சொந்தமானது என்றாலும், சரியல்ல.

8) என் வீட்டை ஒட்டி ஓடை தண்ணீர் செல்வதற்கான வாய்க்கால் பாதை அமைந்துள்ளது என்றால், சரிதான். மேற்படி வாய்க்காலை ஒட்டி என் வீட்டில் மதில்சுவர் அமைந்துள்ளது என்றால், சரிதான். ஆனால், நான் வீடு கட்டவில்லை. வீட்டுடன் கிரயம் பெற்றுவிட்டேன். மேற்படி ஓடையானது அரசு வேளாண்மை உற்பத்தி கழகம் அமைந்துள்ள இடத்தில் இணைகிறது என்றால், சரிதான். சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு மேற்படி ஓடையானது சுமார் 100 அடி அகலம் இருந்ததிருக்குமா என்றால், இருக்கும். தற்போது மேற்படி ஓடையை ஆக்கிரமிப்பு செய்துவிட்டார்கள். தற்போது மேற்படி ஓடை எவ்வளவு அகலம் உள்ளது என்றால், சுமார் 20 அடி அகலம் இருக்கும். மேற்படி 80 அடி அகல ஓடை பகுதி காலப்போக்கில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு விட்டது என்றால், சரிதான். என் வீட்டிற்கு மேற்குபகுதியிலிருந்து வடக்கு பகுதி வரை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது.

9) மேற்படி இருசாக்கவுடரும், அவருக்குபின் மேற்படி தாவா சொத்தை உரிமை மாற்றம் பெற்றவர்களும், மேற்படி ஓடை பகுதியை ஆக்கிரமித்து அதை சமன் செய்து, வீடு கட்டி அனுபவித்து வந்துள்ளனர் என்றால், சரிதான். மேற்படி சொத்தை நான் வாங்குவதற்கு முன்பே முகமது உஷேனும், தேவராஜீம் மேற்படி வீட்டில் குடியிருந்தனர்.

10) என் முன் விற்பனையாளர் தேவராஜீடமிருந்து எவ்வளவு தொகை கொடுத்து தாவா சொத்தை நான் கிரயம் பெற்றேன் என்றால், ரூ.10 லட்சம் கொடுத்து கிரயம் பெற்றேன். நீரோடை புறம்போக்கு நிலத்தை நான் கிரயம் பெற்றதே தவறானது என்றால், சரியல்ல. மேற்படி நிலம் நத்தம் புறம்போக்கு நிலம். அதில் ஒரு பகுதியில்தான் நீரோடை செல்கிறது. இவ்வழக்கில் நான் யார் யாரை பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேன் என்றால்,

சிவக்குமார், அவரது மனைவி சுமதி மற்றும் மேட்டூர் நகராட்சியை பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேன்.

11) எதற்காக மேட்டூர் நகராட்சியை நான் பிரதிவாதியாக சேர்த்துள்ளேன் என்றால், 1, 2 பிரதிவாதிகள் நான் கிரயம் பெற்ற சொத்தில் அவர்களுடைய நிலம் அமைந்துள்ளது என தகராறு செய்ததால், நகராட்சியில் புகார் அளித்தேன். நகராட்சியிலிருந்து எவ்வித நடவடிக்கையும் எடுக்காததால், நகராட்சி மீதும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி காரணத்தை தவிர நகராட்சியை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்க வேறு எந்த காரணமும் இல்லையா என்றால், வேறு எந்த காரணமும் இல்லை.

12) மேட்டூர் நகராட்சியில் உள்ள ஆவணங்களில் நான் வசித்து வருவதாக சொல்லும் நிலம் பொதுப்பணித்துறைக்கு சொந்தமானது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. ஆனால், பொதுப்பணித்துறை அதிகாரிகள் வந்து தாவா சொத்தை பார்வையிட்டு சென்றுவிட்டனர். மேட்டூர் நகராட்சி பதிவேடுகளில் நான் வசித்து வரும் நிலத்தை காலி இடம் என காட்டியுள்ளனர் என்றால், அது தவறானது. என் நிலத்திற்கு நகராட்சியில் வரி விதிக்கின்றனர்.

13) 1, 2 பிரதிவாதிகள் அவர்களது நிலத்தில் சுமார் எத்தனை ஆண்டுகளாக வசித்து வருகிறார்கள் என்றால், சுமார் 25 ஆண்டுகளாக வசித்து வருகிறார்கள். 1, 2 பிரதிவாதிகள் வசித்து வரும் வீடு என்ன வகையான வீடு என்றால், 2 அடுக்கு மாடி வீடு ஆகும். மேற்படி வீடு எப்போது கட்டப்பட்டது என்றால், சுமார் 25 ஆண்டுகளுக்கு மேல் இருக்கும். 1, 2 பிரதிவாதிகளின் நிலத்திற்கு பட்டா உள்ளதா என்றால், தோராய பட்டா கொடுத்துள்ளனர் அது 2-1/2 செண்ட் நிலத்திற்கு மட்டும் தான் உள்ளது. என் நிலத்திற்கு பட்டா உள்ளதா என்றால், இல்லை. என் முன் விற்பனையாளருக்கு பட்டா உள்ளதா என்றால், இல்லை. தாவா சொத்தானது நீரோடை புறம்போக்கு நிலம் என்பதால், தான் தற்போது வரை தாவா சொத்திற்கு பட்டா வழங்கப்படவில்லை என்றால், சரியல்ல.

14) 1, 2 பிரதிவாதிகள் நிலத்திற்கு பட்டா வழங்கும் போது மேற்படி பகுதியில் சுமார் 150 நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டது என்றாலும், என்னுடைய நிலத்திற்கு மட்டும் பட்டா வழங்கப்படவில்லை என்றாலும், சரியல்ல. நான் என் நிலத்தை 2020ம் வருடத்தில் தான் கிரயம் பெற்றேன். அப்போதிலிருந்து நகராட்சியில் விண்ணப்பித்தும், தற்போது வரை தாவா சொத்திற்குரிய எந்த ஆவணத்திலும் பெயர் மாற்றிதரவில்லை.

15) தாவா சொத்து ஓடை புறம்போக்கு நிலத்தில் அமைந்துள்ளதால்தான் என் பெயரில் பட்டா வழங்க மறுக்கிறார்கள் என்றால், சரியல்ல. என் முன் விற்பனையாளரது முன் விற்பனையாளர் முகமது உஷேன் மேற்படி நிலத்தை கிரயம் பெற்று அதில் 10X18 மீட்டர் அளிவில் சிமெண்ட் அட்டை வேய்ந்த வீட்டை அமைத்து மின் இணைப்பு மட்டும் பெற்றிருந்தார் என்றால், சரிதான். மேற்படி வீட்டை சுற்றியும் மதில்சுவர் அமைத்திருந்தார். நான் சொல்வது போல் அவர் மதில்சுவர் எதுவும் அமைக்கவில்லை என்றாலும், அத்துக்காட்டுவதற்காக இருபுறமும் கற்களை மட்டும் வைத்திருந்தார் என்றாலும், சரிதான். மேற்படி நிலத்தை நான் கிரயம் பெற்ற பின்பு அதை ஒழுங்குப்படுத்தி நான் தான் கேட் அமைத்தேன்.

16) அவ்வாறு மேற்படி நிலத்தை நான் ஒழுங்குப்படுத்தும்போது அருகிலுள்ள 1, 2 பிரதிவாதிகளின் நிலத்தில் சுமார் 3 அடி அளவில் ஆக்கிரமித்து காரை அமைத்துக்கொண்டேன் என்றாலும், மேற்படி ஓடையின் மீது சிலாப் அமைத்து, மேற்படி 1, 2 பிரதிவாதிகளுக்கு இடையூறு செய்தேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகளது கழிவு நீர் குழாயை என் வீட்டை ஒட்டி அமைத்துக்கொள்ள கோரியதை நான் மறுத்ததிலிருந்து, என் மீது விரோதம் கொண்டு, பொய்யான புகார்களை தெரிவித்து, பிரதிவாதிகள் தான் எனக்கு இடையூறு செய்கிறார்கள்.

17) நான் ஓடை புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து, கட்டுமானம் செய்துள்ளதால், ஊர் பொதுமக்கள் நகராட்சியில் புகார் அளித்து, நகராட்சியிலிருந்து

JCB இயந்திரம் மூலம் மேற்படி ஆக்கிரமிப்பை அகற்றினார்கள் என்றால், சரியல்ல.

(1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.